# புகழை விரும்பாதீர், இல்லாவிடில் மனவுளைச்சலுக்கும், கவலைகளுக்கும் உள்ளாக்கப்படுவீர்

பிறரின் கவனத்தின் மையமாக இருக்க நாடுவதினாலும், பிறரை மகிழ்விக்க முயற்சி செய்வதினாலும், உங்கள் வாழ்வின் அமைதி மற்றும் உறுதிப்பாட்டை நீங்கள் இழக்கிறீர்.

*அந்த மறுமையின் வீட்டை, இப்பூமியில் (தங்களைப்) பெருமைப்படுத்திக் கொள்ளவும், குழப்பத்தை உண்டாக்கவும் விரும்பாதிருப்பவர்களுக்கே நாம் சொந்தமாக்கி வைப்போம்; (திருக்குர்ஆன்: 28:83)*

ஒரு கவிஞர் கூறினார்:

“யார் பிறரை பின்பற்றுவதிலும், தலைமைக் கொள்ளாமல் இருப்பதிலும் திருப்திக் கொள்கிறாரோ, அவர் தன் பால் அமைதியைக் கொண்டு வருகிறார்.

மேலும் தனது இரவுகளை அமைதியாக கழிக்கிறார்.

நிச்சயமாக காற்று பலமாகவும் கடுமையாகவும் வீசும் பொழுது மரத்தின் உயரமான பாகத்தையே சுண்டி எறிகிறது.”

*அவர்கள் சோம்பலுடையோராகவே நிற்கிறார்கள் - மனிதர்களுக்குத் காண்பிப்பதற்காக; (திருக்குர்ஆன்: 4:142)*

*மேலும் எவர் தாம் செய்யாததை (செய்ததாகக் காட்டிக்) கொண்டு புகழப்படவேண்டும் என்று விரும்புகிறார்களோ... (திருக்குர்ஆன்: 3:188)*

*பெருமைக்காகவும், மனிதர்களுக்குக் காண்பிப்பதற்காகவும் தங்கள் வீடுகளிலிருந்து வெளிக்கிளம்பியவர்க்ளைப் போன்று நீங்கள் ஆகிவிடாதீர்கள்... (திருக்குர்ஆன்: 8:47)*

ஒரு கவிஞர் கூறினார்:

http://theheartopener.wordpress.com

“ஒளிபுகு என்பது தனது செயல்களை காண்பிக்கச் செய்யும் ஒருவரின் மேல் அங்கி, தன் மீது அதனை அவர் சுற்றி போர்த்திக் கொண்டாலும், அவர் நிர்வாணமாகவே இருக்கிறார்.”

http://theheartopener.wordpress.com